Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. C.C.NO. 86/2025
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 2 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | துரைமணி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | துரைச்சாமி | தொழில் | தலைமை ஆசிரியர்(ஓய்வு) |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 75 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 28th day of April 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முன் விசாரணை</u>.- (1,2 எதிரிகள் ஆஜரில் உள்ளனர்)**

நான் திருப்பத்தூரில் வசித்து வருகிறேன். நான் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். அ.சா. 1 ராஜேஸ்வரி என்னுடைய மனைவி ஆவார். 17.02.2024 அன்று இரவு 8.30 மணிக்கு திருப்பத்தூர் வாணியம்பாடி சாலையில் உள்ள முனீஸ்வரன் கோவிலுக்கு என் மனைவியுடன் இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டு மீண்டும் வீட்டிற்கு வருவதற்காக எங்கள் தெருவான அட்வகேட் ராமநாதன் தெருவில் வந்து கொண்டிருந்தோம் பாதாள சாக்கடைக்காக பள்ளம் இருந்ததால் எனது மனைவியை நான் கீழே இறக்கிவிட்டு நான் முன்னால் சென்றேன். என் மனைவி பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தார்.

அப்போது எங்களுக்கு எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் எனது மனைவியின் கழுத்தில் இருந்த 4 சவரன் நகையை பறித்து விட்டார்கள். என் மனைவி திருடன், திருடன் என்று சத்தம் போட்டார். நானும், என் மனைவியும் அவர்கள் பின்னால் சென்று பார்த்தோம். அவர்களை பிடிக்க இயலவில்லை. அதனால், காவல் நிலையம் சென்று என் மனைவி புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 அடி இருக்கும். என்னுடைய வீட்டிற்கு எதிரே வெங்கடேஸ்வரா வாட்டர் சர்வீஸ் உள்ளதா என்றால் இல்லை. எங்கள் தெருவில் எப்போது ஆள் நடமாட்டம் இரவு 10.00 மணி வரை இருந்து கொண்டிருக்கும் என்றால் சரிதான். என்னுடைய வீட்டில் என் பிள்ளைகள் இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த போது ஆள்நடமாட்டம் இருந்ததா என்றால் இல்லை. சத்தம் கேட்டு தான் நான் பார்த்தேன் என்றால் சரிதான்.

எதிரிகளை நான் பார்க்கவில்லை என்றால் தூரத்தில் பார்த்தேன். ஒருவர் ஒல்லியாகவும், ஒருவர் குண்டாகவும் இருந்தார். சாட்சியம் அளிப்பதற்கு முன்பு போலீசார் சொல்லிக் கொடுத்தார்கள் என்றால் இல்லை. எங்களுடைய நகை திருடு போனது உண்மை என்றாலும், ஆனால், வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. காவல்துறை வேறொரு வழக்கிற்கு சம்மந்தப்பட்ட நகையை பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of Witness.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. C.C.NO. 86 /2025
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 1 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேஷ்வரி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | மணி | தொழில் | ஆசிரியர்(ஓய்வு) |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 68 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 28th day of April 2025

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முன் விசாரணை</u>.- (1,2 எதிரிகள் ஆஜரில் உள்ளனர்)**

நான் திருப்பத்தூரில் வசித்து வருகிறேன். நான் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். 17.02.2024 அன்று இரவு 8.30 மணிக்கு திருப்பத்தூர் வாணியம்பாடி சாலையில் உள்ள முனீஸ்வரன் கோவிலுக்கு என் கணவருடன் இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டு மீண்டும் வீட்டிற்கு வருவதற்காக எங்கள் தெருவான அட்வகேட் ராமநாதன் தெருவில் வந்து கொண்டிருந்தோம் பாதாள சாக்கடைக்காக பள்ளம் இருந்ததால் எனது கணவர் என்னை கீழே இறக்கிவிட்டு அவர் முன்னால் சென்றார், நான் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தேன்.

அப்போது எனக்கு எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் எனது கழுத்தில் இருந்த 4 சவரன் நகையை பறித்து விட்டார்கள். நான் திருடன், திருடன் என்று சத்தம் போட்டேன். நானும், என் கணவரும் அவர்கள் பின்னால் சென்று பார்த்தோம். அவர்களை பிடிக்க இயலவில்லை. அதனால், காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பிறகு எனது நகை கிடைத்து விட்டதாக போலீசார் தகவல் சொன்னார்கள். என்னுடைய நகையை நான் நீதிமன்றத்தில் மனு செய்து

பெற்றுக்கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் சம்பவத்தன்று பறிபோன நகை ஆகும். அந்த புகைப்படம், குறுந்தகடு மற்றும் 65 பி சான்றிதழ் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் நகையை பறித்து சென்றவர்களை நான் பார்த்தேன். அதில் ஒருவர் உடல் பருமனாக இருந்தார். மற்றொருவர் மெலிதாக இருந்தார். அவர்கள் ஹெல்மெட் அணிந்திருந்ததால் அவர்களுடைய முகத்தை என்னால் பார்க்க இயலவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இன்று என்ன தேதி என்றால் 18ம் தேதி. என்னுடைய நகை எப்போது திருடு போனது என்றால் 17.02.2024 ஆகும். என்னுடைய நகையை நான் எங்கு வாங்கினேன் என்றால் வேலூரில் வாங்கினேன். அதற்கு ரசீது உள்ளதா என்றால் இல்லை. திருடு போன நகையை எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. ஹெல்மெட் அணிந்திருந்ததால் என்னுடைய நகையை திருடியவர்களை தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திருடு போன நேரம் இரவு 8.30 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மறுநாள் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. சம்மவத்தன்றே புகார் கொடுத்தேன்.

எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்றேன் என்றால் சம்பவத்தன்று இரவு 9.00 மணிக்கு சென்றேன். நாங்கள் வசிக்கும் தெருவின் அகலம் 8 அடி தான் இருக்கும் என்றால் சரிதான். அனைத்து இடங்களிலும் மின் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும் என்றால் சரிதான். இரவு 10.00 மணி வரை அங்கு ஆள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். தற்போது உள்ள மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திற்கு பின்னால் தான் தெரு இருக்கும் என்றால் இல்லை. லைன்ஸ் பள்ளி அருகே உள்ளது. எங்கள் தெருவில் உள்ளே சுலபமாக நுழைந்து திருடிச் செல்ல இயலாது என்றால் சரிதான்.

எத்தனை நாட்கள் கழித்து எனக்கு நகை திரும்ப கிடைத்தது என்றால் ஜனவரி மாதம் கிடைத்தது என்று சொல்லி காவல்துறை மூலம் கிடைத்தது. அதுவரை என் நகையை கண்டுபிடிக்க காவல்நிலையம் செல்லவில்லை என்றால் சென்று கொண்டு தான் இருந்தேன். என் நகை வேறு யாரிடம் களவு போய்விட்டது என்றாலும், வழக்கின் எதிரிகளுக்கும் சம்பவத்திற்கு தொடர்பில்லை என்றால் சரியல்ல.

Signature of Witness.